

# யாழ் மாவட்டச் செயலக மடல்

# යාපනය දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලයේ සඟරාව

# Jaffna District Secretariat Bulletin


சித்திரை- ஆனி 2016 மடல் - 01 இதழ் - 05

T.P No 021 222 2235 / 021 222 2427 email. ddpdpsjaffna@gmail.com


| உள்ளே | பக்கம் |
|---|---|
| திட்டமிடல் | 02 |
| நிர்வாகம் | 03 |
| வாழ்வின் எழுச்சி | 04 |
| கிராம அபிவிருத்தி | 05 |
| தொழிற்துறை | 06 |
| யாழ் பிரதேசம் | 08 |


**மலர் குழு**

போசகர்

திரு.நா.வேதநாயகன்
(அரசாங்க அதிபர்)

வெளியீட்டுக்குழு

திரு.பா.செந்தில்நந்தனன்
(மேலதிக அரசாங்க அதிபர்)

திரு. எஸ். குகதாஸ்
(பிரதம கணக்காளர்)

திருமதி. இ. மோகனேஸ்வரன்
(திட்டமிடல் பணிப்பாளர்)

திரு. க. மகேஸ்வரன்
(மாவட்ட பணிப்பாளர் வாழ்வின் எழுச்சி)

திரு. எஸ். முரளிதரன்
(மேலதிக அரசாங்க அதிபர் - காணி)

திரு. எஸ். சுதர்சன்
(உதவி மாவட்டச் செயலாளர்)

திரு. அ. ஜெசிந்தன்
(மாவட்ட பொறியியலாளர் )

வடிவமைப்பு
திரு. யே. நிரோஷானந்
(அபிவிருத்தி உதவியாளர்)


## புனரமைக்கப்பட்ட துரையப்பா விளையாட்டரங்கு திறப்பு





இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட துரையப்பா விளையாட்டரங்கானது அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் சர்வதேச யோகா தினமான 2016.06.18ந் திகதி திறந்து வைக்கப்பட்டது. இதன்போது இந்தியப் பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களும் காணொளி மூலம் இணைந்து கொண்டார்.




## காணி கையளிக்கும் நிகழ்வு







தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் மேலும் 263.08 ஏக்கர் காணி விடுவிப்பு தொடர்பான நிகழ்வு 2016.06.25 ந் திகதி காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்றது. இதன் போது கௌரவ ஆளுநர் ரெஜினோல்ட் குரே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எந்திரிகருணாசேன ஹெட்டியாராச்சி, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திரு.வி.சிவஞானசோதி மற்றும் அரச அதிபர் திரு. நா. வேதநாயகன் உட்பட விருந்தினர்கள் பங்கு பற்றினார்கள். 263 குடும்பங்களுக்கான காணிவிடுவிப்புக்கான உத்தியோகபூர்வ பத்திரம் கௌரவ ஆளுநர் அவர்களினால் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.



## யாழ் முயற்சியாளர் விற்பனைக் கண்காட்சி - 2016



யாழ் மாவட்ட சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகம் செய்யும் நோக்கிலும், அதற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் யாழ்ப்பாண மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் 2016.04.10 மற்றும் 2016.04.11 ஆந் திகதிகளில் யாழ்ப்பாண மாநகரசபை வளாகத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு. நா.வேதநாயகன் தலைமையில் "யாழ் முயற்சியாளர் - 2016" விற்பனைக் கண்காட்சியொன்று நடாத்தப்பட்டது. இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டதிட்டமிடல் பணிப்பாளர் திருமதி. இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுதலைமை அலுவலக உதவிப் பணிப்பாளர்களான திரு. வெத்தசிங்க பியசேன, திரு. சந்தனம் கெல்வல மற்றும் யாழ்ப்பாண சனச அபிவிருத்தி வங்கி கிளை முகாமையாளர் திரு. சு. சபேஸ்




ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்திருந்தார்கள். யாழ்மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் பயிற்சி வழங்கப்பட்ட 49பயனாளிகள் பங்கு பற்றி தமது உற்பத்திப்பொருட்களை



சந்தைக்கு அறிமுகம் செய்து விற்பனைகளை மேற்கொண்டிருருந்ததுடன் 4000 பார்வையாளர்களுக்கு மேல் பார்வையிட்டு சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்து முயற்சியாளர்களை ஊக்குவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக சுற்றாடல் தினம்





மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் ஆலோசனைப்படி மே 30ம் திகதி முதல் ஜீன் 05 திகதி வரையான காலப்பகுதியை தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனப்படுத்துமாறு அனுப்பிவைக்கப் பட்ட சுற்று நிருபத்திற்கமைய யாழ் மாவட்டச் செயலரின் வழிகாட்டலில் யாழ் மாவட்டச் செயலகத்தால் சுற்றாடல் நேயமிக்க சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் 15 பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கி யாழ் மாவட்டத்தின் கீழ் வரும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் சுற்றாடல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.




| இல | திகதி | வேலைத்திட்டம் |
|---|---|---|
| 01 | 30.05.2016 | அலுவலக சுத்திகரிப்பு |
| 02 | 31.05.2016 | பிரதேச மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்சித் திட்டம் |
| 03 | 01.06.2016 | கிராமிய மட்டத்திலான சமூக விழிப்புணர்வு வேலைத்திட்டம் |
| 04 | 02.06.2016 | மாவட்ட, பிரதேச நகர்ப்புறத்தையும் அதை அண்டிய பகுதிகளிலுமான சுத்திகரிப்பு வேலைத்திட்டம் |
| 05 | 03.06.2016 | ஆலயங்கள் சுத்திகரிப்பு (இந்து,முஸ்லிம்) |
| 06 | 04.06.2016 | மரம் நடுகைத்திட்டம் |
| 07 | 05.06.2016 | கிறிஸ்தவ ஆலய சுத்திகரிப்பு, இறுதிநாள் நிகழ்வுகள், |








## மனிதவலு வேலைவாய்ப்பு பிரிவு





மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட செயலகத்தினால் 26.05.2016அன்று யா/இந்து மகளிர் கல்லூரியில் கல்வி தொழில் வழிகாட்டல் நடாத்தப்பட்டது. இதில் 13 கல்வி தொழில் வழிகாட்டி நிறுவனங்களும் 300ற்கு மேற்பட்ட உயர்தர மாணவர்களும் பங்கு பற்றினர்.

## நிர்வாகப் பிரிவு





யாழ்ப்பாணம் பிரதேச செயலக இரண்டு மாடி புதிய நிர்வாகக் கட்டடத்திற்கான அடிக்கல் 2016.06.17 ந் திகதி நாட்டப்பட்டது. ( கட்டம் - 1 ற்கான நிதி ஒதுக்கீடு 15 மில்லியன் ரூபா ஆகும்)





பருத்தித்துறை பிரதேச செயலக புதிய நிர்வாகக் கட்டடத்திற்கான அடிக்கல் 2016.06.18 ந் திகதி நாட்டப்பட்டது. ( கட்டம் - 1 ற்கான நிதி ஒதுக்கீடு 15 மில்லியன் ரூபா ஆகும்)

## வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான அரச அதிபர் சந்திப்புக்கள்



சுவீடன் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அவர்களுடனான சந்திப்பு



சீன நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அவர்களுடனான சந்திப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்ஸ்தானிகர் அவர்களுடனான சந்திப்பு

## மோட்டார் போக்குவரத்துப் பிரிவு





நேரடி இணையத்தின் (online) மூலம் புதிய மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்கின்ற நடவடிக்கை யாழ் மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளின் பதிவுச் சான்றிதழை அரசாங்க அதிபர் அவர்களிடமிருந்து பிரதி ஆணையாளர் பெற்றுக்கொள்வதையும் அருகில் மோட்டார் வாகன பிரதம பரிசோதகர் மற்றும் அலுவலர்கள் நிற்பதை முதலாவது படத்திலும், மறுபடத்தில் பதிவுக்கு விண்ணப்பிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை வாகன பரிசோதகர்கள் பரிசோதணைக்கு உட்படுத்துவதையும் காணலாம். தற்சமயம் Running Numbers இல் புதிய மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## யூன் 1ம் திகதி வாக்காளர் விழிப்பூட்டும் சிறப்பு நிகழ்ச்சிகள்

- யாழ்ப்பாணம் பஸ்நிலையம், அண்மித்த பகுதிகளில் பஸ் மற்றும் முச்சக்கர வண்டிகளில் வாக்காளர்களை விழிப்பபூட்டும் வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டது.
- வாக்காளர்களை விழிப்பூட்டும் நடைபவனி யாழ்மத்திய பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பித்து மாவட்டச் செயலகத்தில் நிறைவுற்றது. (அண்ணளவாக 500 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்)
- மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் 9.30 தொடக்கம் 12.00 மணி வரை சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன.
- வாக்காளர் தின நிகழ்வில் கீழ்வருவோர் கலந்து கொண்டனர்

பேராசிரியர். எஸ். ரட்ணஜீவன் ஹீல், அங்கத்தவர், தேர்தல்கள் ஆணைக்குழு. திரு. நா. வேதநாயகன், அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் திரு. கே. தவலிங்கம், தலைவர், எல்லை நிர்ணய ஆணைக்குழு ஜனாப். ஏம். ஏம். மொஹமட், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை, உறுப்பினர், உள்ளூராட்சி எல்லை நிர்ணய ஆணைக் குழு. பேராசிரியர். ஆர். சிவச்சந்திரன், சிந்தனைக்கூட முக்கியஸ்தர். மேலும் PAFEREL, CMEV உறுப்பினர்களும் மற்றும் பொது நலன்விரும்பிகள் பலரும் கலந்து கொண்டனர்.










# வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி பிரிவு

## சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு வாரம் 2016.05.31 தொடக்கம் 2016.06.26 வரை





சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தோடு இணைந்ததாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தால் நடாத்தப்படும் 'போதையிலிருந்து விடுதலையான ஒரு நாடு' என்ற மகுட வாசகத்துடன் கொடிவார நிகழ்வில் மாவட்ட செயலகத்தில்அரச அதிபர் அவர்களுக்கும், வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளர் அவர்களும் கொடி அணிவித்து ஆரம்பித்து வைத்தபோது......

## வீட்டுலொத்தர் நிகழ்ச்சித்திட்டத்திற்கான காசோலை வழங்கல் - 2016

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்படும் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகளில் குலுக்கல் மூலம் வீட்டுலொத்தர் சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்ட 14 பயனாளிகளுக்கான காசோலை வழங்கல் நிகழ்வு 20.05.2016 ந் திகதியன்று அரசாங்க அதிபர் அவர்களின் மாநாட்டு மண்டபத்தில் வாழ்வின் எழுச்சி மாவட்டப் பணிப்பாளர் திரு. க. மகேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நா. வேதநாயகன் அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட செயலக திணைக்கள தலைவர்கள். பிரதேச செயலாளர்கள்இ மாவட்ட வாழ்வின் எழுச்சி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.






(வீட்டு லொத்தர் பயனாளி ஒருவருக்கு அரசாங்க அதிபர் அவர்களாலும் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) அவர்களாலும் காசோலை வழங்கிய போது.....)

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்கள வேலைத்திட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டம் 2016

மேற்படி கூட்டமானது 24.06.2016 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நா. வேதநாயகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக வலுவூட்டல் மற்றும் நலநோம்புகை அமைச்சர் கௌரவ S.B.திசாநாயக்க அவர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார் . மேலும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்கள குறுநிதி பணிப்பாளர், சமூக மட்ட அமைப்புக்களின் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கியதுடன் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் பணிப்பாளர்கள், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் வாழ்வின் எழுச்சி திணைக்கள முகாமையாளர்களும் உத்தியோகர்த்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



(அரசாங்க அதிபர் தலையுரை நிகழ்த்துகையில்..



(கௌரவ அமைச்சர் உரை நிகழ்த்துகையில்)



(பணிப்பாளர், குறுநிதி உரை நிகழ்த்துகையில்)

## மாவட்ட கிராம அபிவிருத்தி பிரிவு


### வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு 05 இலட்சம் நிதியொதுக்கீட்டில் வாழ்வாதார உதவித்திட்டம்





வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவர்களது திட்டத்திற்கு அமைவாக, கிராம அபிவிருத்தித் திணைக்கள த்தால் மாகாண அபிவிருத்தி நன்கொடையின் கீழ் (PSDG) வேலணை கிழக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு மோர் மிளகாய் பதனிடும் திட்டம் வழங்கப்பட்டு பட்டு அதன் செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு 28-04-2016 வியாழன் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றபோது.

### யாழ் மாவட்ட கிராம அபிவிருத்திப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம்




யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள செயற்பாடுகளின் முன்னேற்றங்களை ஆய்வு செய்வதற்கான கலந்துரையாடல் அரசாங்க அதிபர் தலைமையில் 10.05.2016 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அரசாங்க அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் திரு.நா.வேதநாயகன், மேலதிக அரசாங்க அதிபர் திரு.பா.செந்தில்நந்தனன் மற்றும் கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜெ.ஜெ.சி.பெலிசியன் ஆகியோர் இணைந்து மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கடமையாற்றுகின்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தையல் போதனாசிரியர்கள் ஆகியோருடன் ஆரய்ந்தபோது....

### யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார திட்டம்



யாழ் மாவட்ட புனர்வாழ்வு பெற்ற போராளிகள், யுத்தத்தில் பிள்ளைகளை இழந்த முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், அரசியல் கைதிகளின் குடும்பங்கள், ஏனைய போராட்டக் குழுக்களில் இருந்து உயிர் நீத்த போராளிகளின் குடும்பங்கள் ஆகியோருக்கான வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சரின் மேற்படி குடும்பங்களை வாழ்வாதாரத்தில் உயர்த்தும் திட்டத்திற்கு அமைவாக, 2016 ஆம் ஆண்டிற்கான யாழ் மாவட்டத்திற்கான பொருத்தமான வாழ்வாதாரத்தை தெரிவுசெய்யும் ஒன்றுகூடல் 08-06-2016 புதன் காலை 10.30 மணியளவில் யாழ் நாவலர்வீதியில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் வடக்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடாத்தப்பட்டபோது...



## கைத்தொழில் அபிவிருத்திச் சபை

வடமாகாண விசேட செயற்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனர்வாழ்வு அமைச்சின் நிதியனுசரணையுடன் அரசாங்க அதிபர் அவர்களின் வழிகாட்டலில் வதிரி தோற்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க தொழிலாளர்களுக்கான உற்பத்திப்பொருட்களின் வடிவமைப்பு விருத்தி தொடர்பான பயிற்சி நெறியானது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தோற்பொருள் அபிவிருத்தி பிரிவினால் 29.06.2016ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.




## விவசாயப் பிரிவு

### வீட்டுத்தோட்டம் அமைத்தல்



தேசிய உணவுற்பத்தி திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்டம் அமைத்தல் செயற்பாடு மாவட்ட,பிரதேச மற்றும் கிராமமட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கிராம மட்டத்தில் ஒரு கிராமத்தில் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத்தோட்டம் அமைக்க ஊக்குவிக்கப்படவுள்ளனர்.மாவட்டத்திலுள்ள அனைத்து அலுவலகங்களிலும் வீட்டுத்தோட்டம் அமைக்கப்பட வேண்டும் என சுற்றுநிருபத்தினூடாக அறியத்தரப்பட்டுள்ளது. அந்தவகையில் மாவட்ட செயலகத்திலும் வீட்டுத்தோட்டம் அமைக்கும் செயற்பாடுகள் அரசாங்க அதிபரி-னால் 04.04.2016 ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்துடன் இச் செயற்பாடுகள் அனைத்து பிரதேச செயலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



## தொழிற்துறை பிரிவு



வேலணை பிரதேச செயலர் பிரிவில் 21 பயிற்சியாளர்கள் மின் இணைப்பு, மின் சுற்றுக்குமான பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.



ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 20 பயிற்சியாளர்கள் மெழுகுவர்த்தி செய்வதற்கான பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர.



யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 20 பயிற்சியாளர்கள் வாழ்த்து அட்டைகள் செய்யும் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.



தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் 15 பயிற்சியாளர்கள் தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 20 பயிற்சியாளர்கள் தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.



உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் நடைபெற்றது.



காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 15 பயிற்சியாளர்கள் சுளகு செய்யும் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.




நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 15 பயிற்சியாளர்கள் பனை ஓலையில் ஆக்கங்கள் செய்வதற்கான பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.




மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 15 பயிற்சியாளர்கள் தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.

## மாவட்ட சிறுவர் அபிவிருத்திப் பிரிவு





ஐக்கிய நாடுகள் சபைக்கு சிறுவர் உரிமைகள் சமவாயம் அறிக்கையிடலுக்காக சிறுவர்களிடமிருந்து கருத்தறியும் செயலமர்வு சென்ற 05.05.2016 ஆம் திகதி யாழ் மாவட்டசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது.....

யாழ் மாவட்டத்தில் பெற்றோரை இழந்த சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 100 மாணவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா நிதி வழங்கும் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையில் கடந்த 02.06.2016ஆம் திகதி யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 118 மாணவர்களுக்கு பாடசாலை சப்பாத்துக்கள் வழங்கப்பட்டன.



சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காட்டுப்புலம் கிராமத்தில் வசிக்கும் மாணவர்களின் பாடசாலை போக்குவரத்து வசதியினை மேம்படுத்தும் பொருட்டு கடந்த 20.04.2016 ஆம் திகதி 24 மாணவர்களுக்கு "புதுவாழ்வும் புனர்வாழ்வும்" நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.சர்வேஸ்வரன் அவர்களின் அனுசரணையில் 24 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.



டென்மார்க்கில் வசிக்கும் மதனராஜா சரோஜாதேவி தம்பதிகள் தமது 25ஆவது திருமண நாளினை முன்னிட்டு பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை கடந்த 16.06.2016 ஆம் திகதி யாழ் மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கினர்.

## மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு பிரிவு






அனர்த்த ஆபத்து தணிப்பு நடவடிக்கைகள், அனர்த்த முன்னாய்த்த செயற்பாடுகள், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள், அவசர நிவாரண உதவிகளின் ஒருங்கிணைப்பு போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### சமூக ஒருங்கிணைப்புக்கான நட்புறவு செயலாற்றுகைகள் மற்றும் அடைவுகளுக்கான கட்டமைப்பு 2015 -2030

நிலைத்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் செந்தாய் கட்டமைப்பின்முன்னுரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 8 தூண்களின் (Pillars) மேம்பாடும் அதன் அடைவுகளையும் முன்னிலைப்படுத்தி உருவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பச்செயற்பாடாக (22.04.2016) சூழற்பாதுகாப்பும் அனர்த்த ஆபத்துக்குறைப்பு செயற்பாடும் மணற்காட்டுப் பிரதேசத்தின் சூழற்தொகுதியினை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது








மாவட்ட இடஞ்சார் தீர்மானம் மேற் கொள்ளல் ஆதார முறைமை அலகு உருவாக்கப் பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்தி பாதையில் யாழ் பிரதேசம்






யாழ்ப்பாணம் என்ற பெயர் ஒரு நகரத்துக்காகி இன்று குடாநாடு முழுவதையும் குறிப்பதாயுள்ளது. இக் குடாநாட்டின் தலைப்பட்டினமாகவும் முக்கிய நகரமாகவும் கருதப்படுவது யாழ்ப்பாணமாகும். 1972கள் வரை யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இரு பிரிவுகளையும் இணைத்து யாழ்ப்பாண பிரதேச நிர்வாக முறையாகக் காணப்பட்டது. பின்னர் 1972களில் யாழ்ப்பாணம் தனியான உதவி அரசாங்க அதிபர் பணிமனையாக உருவாகியது. இக்காலத்தில் நான்கு கிராம அலுவலக பிரிவுகளைக் கொண்ட ஓர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகமாக யாழ்ப்பாணம் காணப்பட்டது. 1993.01.01 இப் பிரதேச நிர்வாக ரீதியான சனத்தொகை, புவியியல் நிலைமைகள் கருத்தில் கொள்ளப்பட்டு 28 கிராம அலுவலக பிரிவுகளாக மாற்றம் பெற்று பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டது. “ஒற்றுமையே அபிவிருத்தி” என்ற மகுட வாசகத்தின் கீழ் 59772 மக்களின் பிரதேச அபிவிருத்தியில் பங்காற்றி வருகின்றது.



2010ம் ஆண்டிலிருந்து கமநெகும, பன்முகப்படத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம், அனர்த்த முகாமைத்துவம், வடக்கின் வசந்தம், வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு, இந்திய வீட்டுத்திட்டம், பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டம், மீள் குடியேற்ற அமைச்சின் வீட்டுத்திட்டம் ஆகியவற்றின் ஊடாக 2015 காலப்பகுதி வரை ரூபா 242.81 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டள்ளன. இதில் உட்கட்டமைப்பு வசதிகளாக வீடமைப்பு, வீதி, கால்வாய், பொதுக்கட்டடங்கள் போன்றவையும் வாழ்வாதாரத் திட்டங்கள் கலாச்சாரத்திட்டங்கள், சிறுவர் அபிவிருத்தி, விளையாட்டு மேம்பாடு போன்ற திட்டங்களும் உள்ளடங்கியுள்ளன. அரசசார்பற்ற நிறுவனங்களாக HUDEC மற்றும் MFCD ஊடாக ரூபா 29.005 மில்லியன் பெறுமதியான வீட்டுத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.





2015ல் இந்திய வீட்டுத்திட்டத்தின் ஊடாக 257 வீடுகளும், 2016ல் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு மீள்குடியேற்ற இந்து கலாச்சார அமைச்சின் ஊடாக 221 வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. 2016ல் 160 பேருக்கு தலா ரூபா 0.1 மில்லியன் பெறுமதியான வாழ்வாதாரத்திட்டமும் 82 பயனாளிகளுக்கு தலா 54,500 ரூபா பெறுமதியான மலசலகூடங்களும் 40 பயனாளிகளுக்கு தலா 200,000 ரூபா பெறுமதியான வீடுகளும் அனர்த்த வீடுகள் திருத்தம் தலா 50,000 ரூபா பெறுமதியான 57 வீடுகளும், சமூக சேவை அமைச்சின் ஊடாக மாதாந்த உதவிப்பணம் 1534 பேருக்கும், முதியோர் கொடுப்பனவு 1021 பேருக்கும், மாற்றாற்றல் உடையோர் கொடுப்பனவு 103 பேருக்கும் ஆக இவ்வாண்டுக்கான அபிவிருத்தி திட்டங்கள் இற்றை வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.



இவற்றுக்கு மேலதிகமாக யாழ் நகர அபிவிருத்தி ஊடாக கால்வாய்கள், குளங்கள், வீதிகள் உட்பட யாழ் நகர உட்கட்டுமான அபிவிருத்திக்கு 55 மில்லியன் U.S டொலர் செலவிடப்படவுள்ளது.



